*1*

# பிரச்சனைக்கு தேவனிடத்திலிருந்து தீர்வு தேவைப்பட்ட சபை

## (1 கொரிந்தியர் 1:1–17)

*1 கொரிந்தியர் புத்தகத்தை படிக்கும்போது, கொரிந்து பட்டணத்தில் இருந்த சபைக்கும் இன்று உள்ள கர்த்தருடைய உள்ளூர் சபைகளுக்கும் இடையே ஒற்றுமைகளை நாம் காணுகிறோமா? முதலாவதாக, "நாம் ஆராதிக்கும் எனது உள்ளூர் சபையில் கொரிந்துவிலிருந்த சபையைப் போன்று பிரச்சனை எதுவுமில்லை! அந்த ஜனங்களுக்கு எல்லாவிதமான பிரச்சனைகளும் இருந்தன; ஆனால் நான் அருமையான ஒரு உள்ளூர் சபையில் அங்கத்துவம் பெற்றிருக்கிறேன்!" என்றே சொல்ல விரும்புவோம்.*

*கொரிந்து சபையில் பிரச்சனைகள் இருந்தது என்னவோ உண்மைதான். அந்த உள்ளூர் சபையிலிருந்த ஐக்கியமின்மை அதை பிளவுபடுத்திக் கொண்டிருந்தது வெளிப்படையான ஒழுக்கமின்மையை அந்த சபை சகித்துக் கொண்டிருந்தது. அங்கத்தினர்கள் ஒருவருக்கு எதிராக ஒருவர் வழக்குத் தொடுத்தனர். இந்தக் கிறிஸ்தவர்கள் விவாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் வித்தியாசப்பட்டிருந்தனர், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை புசிக்கிற விஷயத்தில் அவர்கள் ஒத்துப்போகவில்லை, ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதில் சச்சரவுகள் ஏற்பட்டன, மேலும் சில சகோதரர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்த தவறான உபதேசங்களை ஏற்றுக் கொண்டிருந்தனர்.*

*இருப்பினும் கொரிந்துவிலிருந்த சபை, இன்றுள்ள அநேக உள்ளூர் சபைகளிலிருந்து உண்மையில் வித்தியாசப்பட்டிருக்கவில்லை. சபையிலே சண்டை சச்சரவுகள் இருக்கிறதா? சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வழக்குத் தொடுத்துக் கொண்டுள்ளனரா? யாராகிலும் ஒழுக்கமற்ற நடத்தையுடையவர்களாயிருக்கிறார்களா? விவாக காரியங்கள் குறித்த கேள்விகளுக்கு அங்கத்தினர்கள் ஒத்துப்போகாத தன்மையுள்ளவராயிருக்கிறார்களா? சில உபதேசங்களைக் குறித்தோ அல்லது நடைமுறை பழக்கங்களை குறித்தோ பிரச்சனைகள் எழுகின்றனவா? சபையில் சிலர் ஒரு பொய்யான உபதேசத்தை போதித்து மற்றும்/அல்லது விசுவாசித்து வருகிறார்களா? நாம் எண்ணிக் கொண்டிருக்கிற பலமான விசுவாசம் மிகுந்த சபைகளில் கூட, இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் ஒருவேளை ஆச்சரியப்படத்தக்க வகையில் இல்லை என வலியுறுத்தப்படுவதைக் காணக்கூடும்.*

கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும் நோக்கில், தேவனுடைய போதனைகளை சகோரர்களுக்கு கொடுக்கும் பொருட்டு பவுல் எழுதினார். கொரிந்துப் பட்டணத்துக்கு கொடுக்கப்பட்ட இந்தப் போதனைகள் "குழப்பம் உள்ள சபைக்கு தேவனுடைய தீர்வு" மற்றும் பவுல் கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்குச் சொன்னவைகள் "இன்று குழப்பமுள்ள எந்த சபைக்கும் தேவையான தேவனுடைய தீர்வு" என்று நினைக்கப்படலாம்.

## இயல்பு நிர்ணயம்

பவுல் அந்த உள்ளூர் சபையின் நிலைமையை மிகவும் துல்லியமாக நிர்ணயம் பண்ணத் துவங்கினார். தனது நோயின் இயல்பை சரியான முறையில் நிர்ணயம் பண்ணாமல் போனால் ஒருவர் தனது நோயிலிருந்து சுகம் பெறக் கூடும் என்று எதிர்பார்க்க இயலாதது போலவே ஒரு உள்ளூர் சபையின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தின் இயல்பை துல்லியமாக நிர்ணயம் பண்ணாத பட்சத்தில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குரிய வழியை நாம் எதிர் பார்க்க இயலாது.

கொரிந்து பட்டணத்துச் சபையின் ஆரம்பிக்கப்பட்ட இயல்பின் நிர்ணயம் அச்சபையின் ஆஸ்தி மற்றும் கடன் (பற்று) பொறுப்புக்களைக் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை உள்ளடக்கியது (1:1-17).

### ஆஸ்திகளை அறிந்துணருதல்

சபையின் வளர்ச்சிக்காக அதன் பிரச்சனைகளைத் தீர்க்க விரும்பும் எவரும் ஆரம்பத்திலேயே அதன் ஆஸ்திகளை அறிந்துணர்வர். ஒரு சபை எப்படி ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது என்பதை ஒருவர் கண்டறியமுடியாத அளவுக்கு எந்த சபையும் பிரச்சனைகளில் மூழ்கிவிடாது.

கொரிந்துவிலிருந்து சபை செழிப்பான ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தது. சபைக்கு இருந்த மூன்று ஆசீர்வாதங்களை பவுல் குறிப்பிடுகின்றார். அவர்கள் கொண்டிருந்த பிற ஆசீர்வாதங்களையும் நாம் அடையாளங் காணமுடியும்.

*தேவனோடு அவர்களுக்கிருந்த உறவுமுறை (1:2).* கர்த்தருடன் சிறப்பான உறவுமுறையைக் கொண்டிருந்த ஜனங்களால் கொரிந்து பட்டணத்து சபை அமைந்திருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்டமுறையில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், அல்லது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவனுடைய ஊழியத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரோடும்கூட அவர்களும் பரிசுத்தவான்களானவர்கள்![1] அவர்கள் தேவனுடைய சபையார்கள் (1:2).

*ஆவிக்குரிய வரங்கள் (1:4-7).* சபையார் அநேக ஆவிக்குரிய வரங்களை தேவனிடத்திலிருந்து ஈவாகப் பெற்றவர்கள். புத்தகத்தின் பின்பகுதியில் பவுல் விவாதிப்பவைகளைக் கொண்டு (அதிகாரம் 12-14), இந்த வரங்கள் பரிசுத்த ஆவியின் அற்புதவரங்கள் என்பதையும், இளம் சபைக்கு வழி நடத்தும்படியாய்க் கொடுக்கப்பட்டவைகள் என்பதையும் நாம் தீர்மானமாகச் சொல்லலாம். தேவனுடைய கிருபையினால் கொடுக்கப்பட்ட இந்த ஆவிக்குரிய வரங்களைக் குறித்து பவுல் உறுதியாக குறிப்பிடுகின்றார் (1:4). அவர்,

> கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும்

> *மற்றெல்லாவற்றிலும் சம்பூர்ணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால் அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன், ... அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் (1:5-7அ).*

*உறுதியளிக்கப்பட்ட நம்பிக்கை (1:7ஆ-9).* கர்த்தர் கிறிஸ்தவர்களை "முடிவு பரியந்தம்" ஸ்திரப்படுத்துவார் என்று உறுதியான நம்பிக்கையை சபை பெற்றிருந்தது. இங்கே குறிப்பிடப்படுகிற "முடிவு பரியந்தம்" என்பது "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுகிற" "இயேசு கிறிஸ்துவின் நாள்" (1:7ஆ, 8) - இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், உலகத்தின் முடிவும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுமான நாள். இந்த உறுதியை அவர்கள் எங்கிருந்து பெற்றிருந்தனர்? "தேவன் உண்மையுள்ளவர்" என்கிற நிச்சயத்திலிருந்து (1:9)!

இந்த நன்மைகள் கொரிந்து பட்டணத்து சபை அற்புதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்த கருத்தைக் குறிப்பிடுகிறது! கூடுதலாக, இவ்வசனத்தில் குறிப்பிடப்படாத ஆவிக்குரிய அனுகூலங்களும் அவர்களுக்கு இருந்தன.

*திறமைமிகு ஊழியர்கள்.* சபை ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது ஏனெனில் அங்கே வல்லமையான ஊழியர்கள் ஊழியப் பணியாற்றினர். அது (சபை) அப்போஸ்தலனாகிய பவுலினால் துவங்கப்பட்டது (நடபடிகள் 18). அவர்களைப் பவுல் தனது பிரியமான பிள்ளைகள் என்றும் சுவிசேஷத்தினால் அவர்களைப் பெற்றதாகவும் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 4:14, 15). பின்னர் சாதுரியவானாகிய அப்பொல்லோ கொரிந்து சபையில் ஊழியம் செய்திருந்தார் (நடபடிகள் 18:24).

*பிற சொத்துக்கள்.* பவுல் குறிப்பிடாத கூடுதல் ஆஸ்தியையும் சபை கொண்டிருந்தது. உதாரணமாக கொரிந்து பட்டணத்திலிருந்த சபை மன நிறைவைத்தரும் வகையில் பெரிதாக இருந்திருக்க வேண்டும் (நடபடிகள் 18:8). இந்த புதிய மார்க்கத்தைக் குறித்து யூதர்கள் மிரளுகிற அளவுக்கு பெரிதாக இருந்திருக்கிறது (18:12-17). மேலும், பட்டணத்து விசாரணைக்காரர்களாகிய தலைவர்களில் சிலர் அங்கம் வகித்திருந்ததைச் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு சபை இருந்தது (ரோமர் 16:23) இதில் "ஏராஸ்து எனும் பட்டணத்து உக்கிராணக்காரனும்" (ரோமர் 16:23) மற்றும் சபையை நடத்த தேவையான மிகப்பெரிய வீட்டை உடையவனாகிய, காயு (ரோமர் 16:23; 1 கொரிந்தியர் 1:14). பவுலினால் ஞானஸ்நானம் பெற்றவனும் ஜெப ஆலயத்தலைவனுமாகிய கிறிஸ்புவும் அங்கு இருந்தான் (நடபடிகள் 18:8). மாம்சத்தின்படி ஞானிகள் அநேகர் இல்லை, வல்லவர்கள் அநேகர் இல்லை, பிரபுக்கள் அநேகர் இல்லை என்று கூறியதன் மூலம் (1 கொரிந்தியர் 1:26), அவர்களில் யாரோ *சிலர்* ஞானிகளாக, வல்லவர்களாக, பிரபுக்களாக இருந்துள்ளனர் என்பதை பவுல் குறிப்பாக உணர்த்துகிறார்.

பவுல் சபையின் பெரிய பிரசங்கியார்களையோ, எண்ணிக்கையையோ அதன் பிரதான அங்கத்தினர்களையோ குறிப்பிடாதது ஏன்? ஏனெனில் கொரிந்துவிலிருந்து அங்கத்தினர்கள் ஏற்கனவே தங்களின் பிரசங்கியார்களைக் குறித்தும் அங்கத்துவத்தைக் குறித்தும் உயர்வாக எண்ணிக் கொண்டிருந்தனர்.

யார் சிறந்த பிரசங்கியார் என்பதில் மாறுபட்ட கருத்தை உடையவர்களாகவும் (1:12, 13) மற்றும் இறுமாப்புடையவர்களாகவும் (4:6, 18; 13:4 ஐக் காண்க). ஆதலால்தான் பவுல் கொரிந்து பட்டணத்தின் பிரசங்கியார்களின் கடமையை மட்டுப்படுத்தி (3:6) அங்கத்தினர்களிலும் அநேகர் வல்லவர்களாகவோ பிரபுக்களாகவோ இருந்ததில்லை என்பதை வலியுறுத்தினார். அவர்களுடைய எண்ணிக்கையோ, அங்கத்தினர்களுக்கு இருக்கும் செல் வாக்குகளையோ அல்லது பிரசங்கியார்களையோ சார்ந்திராமல் அவர்களுடைய வாழ்வில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தவராகிய கிறிஸ்துவை மட்டும் தனது வாசகர்கள் சார்ந்திருக்கும்படி விரும்பினார்.

இப்போழுதிருக்கிற சபையைப்பற்றி என்ன? அதின் சொத்துக்கள் (ஆஸ்திகள்) யாவை? கொரிந்து சபையார்களைப் போலவே இன்றைய கிறிஸ்தவர்களும் அநேக வழிகளில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் போலவே நாமும் அழைக்கப்பட்டவர்கள் ... பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் ... நாம் தேவனுடைய சபையாக உருவாக்கப்பட்டவர்கள், அப்போஸ்தலர்களுக்கு ஏவப்பட்ட வசனங்களைக் கேட்டு நாம் கீழ்ப்படிந்தவர்கள். நாம் எண்ணியடங்கா வரங்களைப் பெற்றவர்கள் - அற்புத வரங்களாயிராவிட்டாலும் - அவை தேவனால் கொடுக்கப்பட்ட வரங்களே. நமது உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்க்க அறைகூவல் விடுகிற நாம், நமது அனைத்து ஆசீர்வாதங்களையும் நன்மை களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஆஸ்திகள் சிறப்பான உள்ளூர் சபைகளைக் கட்டியெழுப்ப ஏதுவான அஸ்திபாரமாகும்.

எப்படியிருப்பினும், கொரிந்துயர்களைப் போல நமது மிகவும் விலையேறப்பட்ட ஆஸ்தி, நமது எண்ணிக்கையிலோ காணிக்கையிலோ, பிரசங்கியார்களிலோ அல்லது மூப்பர்களிலோ இல்லை என்பதையும், ஆனால் கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிற ஆசீர்வாதங்களில்தான் இருக்கிறது என்பதையும் மனதில் வைக்க வேண்டும். இவைகளையே நாம் சார்ந்திருக்கவும் வேண்டும் - உலகப் பிரகாரமான ஞானத்திலோ, சாதுரியத்திலோ, எண்ணிக்கையிலோ அல்லது செல்வாக்கிலோ அல்ல.

**பற்றுப் பொறுப்புக்களை உணருதல்**

கொரிந்து பட்டணத்து சபை அநேக சொத்துக்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் கட்ட வேண்டிய கடன் பொறுப்புக்களும் அவர்களுக்கு இருந்தது. இந்த நிருபத்தின் மீதமுள்ள பெரும் பகுதியை கொரிந்துவிலிருந்த பிரச்சனைகளையும் அவற்றைத் தீர்க்க வேண்டிய நிவாரணங்களையும் குறித்து எழுதி நிரப்புகிறார். தன் தலையை மணலுக்குள் புதைத்து கொண்டு எதுவும் சரியாக இல்லாவிட்டாலும் எல்லாம் சரியாக இருக்கிறது என்பது போல அவர் நடித்துக் கொண்டிருக்கவில்லை. சபையின் பிரச்சனையை அடையாளங் கண்டு பேசப்படுதல் வேண்டும் என்று அவர் நம்பினார். இருப்பினும், இன்று ஒரு உள்ளூர் சபை வெற்றி கொள்ள வேண்டுமானால், அதின் அங்கத்தினர்கள் செலுத்த வேண்டிய கடன் பொறுப்புக்களை உணர்ந்து - சபையிலுள்ள பிரச்சனைகளைக் கண்டு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற மனதையுடையவர்களாக இருக்க வேண்டும்.

பவுல் அவர்கள் “பிரிவினைகளில்லாமல்” ஒருவருக்கொருவர் ஒத்துப்போகும் தன்மையுடைவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்லி துவங்குகிறார்

(சீக்கீஸ்மா; வசனம் 10). "ஏனெனில், என் சகோதரரே, வாக்குவாதங்கள் உண்டென்று உங்களைக்குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது ... உங்களில் (ஒரு) சிலர்; நான் 'பவுலைச் சேர்ந்தவனென்றும்,' நான் 'கேபாவைச் சேர்ந்தவனென்றும்' நான் 'கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும்' சொல்லுகிறபடியால்'' (வசனங்கள் 11, 12), இப்படிச் சொல்லுகிறேன்.[2] பவுல் பிரிவினையாகிய பிரச்சனையிலிருந்து துவங்குகிறார், ஏனெனில் சபை எதிர்நோக்கிக் கொண்டிருந்த மற்ற பிரச்சனைகளோடு அது சம்பந்தப்பட்டிருந்தது. உதாரணமாக, ஒருவருக்கெதிராக ஒருவர் வழக்காடும்படி போன காரியம் சகோதரருக்குள் ஒற்றுமைக் குறைவை வெளிப்படுத்தியது. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை சிலர் புசித்தபோது, அது மற்றவர்களுக்கு இடறலை உண்டாக்கியது, அல்லது கர்த்தருடைய பந்தியைக் குறித்த சண்டை அல்லது அற்புத வரங்களைப் பயன்படுத்திய விதம் ஆகியவைகளெல்லாம் அவர்களுக்குள் இருந்த பிரச்சனைகளாகிய வாக்குவாதங்களையும் ஐக்கியமின்மையையும் தாமாகவே பிரதிபலித்தது.

## நிவாரணம்

பவுல் அவர்களின் பிரச்சனைகளை மட்டும் அடையாளப்படுத்திக் காண்பிக்க வில்லை, அவர்களின் ஐக்கியமின்மையையும் அதற்கான நிவாரணத்தையும் கூட முன் மொழிந்தார். நிவாரணமாக அவர் கொடுத்த ஆலோசனைகள் அநேக காரியங்களை உள்ளடக்கியிருந்தது.

1. *ஒன்றுபடும்படி முழுமையான ஐக்கியத்தை நிறைவேற்ற பிரயாசப்படுங்கள்.* பவுல் பின்வரும் வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறார். "நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையுமுள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, ..." (வசனம் 10). இங்கு பவுல் வேறுபட்ட மூன்று காரியங்களைக் குறித்து பேசவில்லை, மாறாக ஒரே கருத்தை மூன்று விதமாகக் குறிப்பிடுகிறார். அதன் மையக் கருத்து எந்த அடிப்டையிலும் கொரிந்தியர்கள் பிரிவுகளைக் கொண்டிருப்பதை பவுல் விரும்பவில்லை. சூழ்நிலைகேற்ப ஒத்துப்போகாத நிலைமை சபையில் உருவாக இடமுண்டு என்றபோதிலும், நாம் நமது கருத்துக்களின் அணுகுமுறையை வித்தியாசமான கண்ணோட்டத்தில் காண சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஆதலால் பவுல் சபை முழுமையான ஐக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். நமக்குள் எப்படிப்பட்ட ஒத்துப் போகாத காரியங்கள் இருந்தபோதிலும், வெளிப்படையான சண்டைகளையோ பிரிவினைகளையோ நாம் உண்டாக்கிவிடக் கூடாது. இங்கே முன் வைக்கப்பட்டுள்ள ஐக்கியத்தின் முழு சபையிலிருக்கிற எல்லாவிதமான பிரிவினைகளையும் பாவமுள்ளதாக்குகிறது.

2. *ஒற்றுமைப்பட மனுஷர்களையல்ல, கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும்.* வசனங்கள் 11, 12ல் பிரச்சனையை பவுல் அலசி ஆராய்கிறார். சபை அங்கத்தினர்களுக்குள் "சண்டைகள்" ஏற்பட்டன. சிலர் பவுலைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தனர்; சிலர் அப்பொல்லோவையும்; சிலர் கேபாவையும் அல்லது பேதுருவையும் சிலர் கிறிஸ்துவையும் பின்பற்றினர்.[3] இங்கே "கிறிஸ்துவின்" பெயர் மற்ற பெயர்களைப் போல மற்றொரு பிரசங்கியார்களை மேலும் பயன்படுத்துவதுபோல் தோன்றுகிறது. சிலர், மற்ற கிறிஸ்தவர்களைக்

காட்டிலும் கிறிஸ்து கொஞ்சம் நல்ல பிரசங்கியார் அவ்வளவுதான் என்பதுபோல் பேசினதாகக் காணுகிறது. அவர்கள் அவரையும், பவுல், பேதுரு, அப்பொல்லோ[4] போன்றவர்களைப் போல் ஒருவராகத் தெரிந்து கொண்டிருந்தனர். சபையார்கள் கிறிஸ்துவுக்கு பதிலாக பிரசங்கியார்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தனர். யார் சிறந்த பிரசங்கியார் என்று அவர்கள் வாக்குவாதம் பண்ணி தாங்கள் அதிகமாய் விரும்புகிற பிரசங்கியாரோடு தங்களை வரிசைபடுத்திக் கொண்டனர் என்று கூறலாம்.

அநேகமாக, உண்மையில் இந்த கிரேக்க சமுதாய மக்களின் சொல்லாட்சி மற்றும் சாமர்த்தியமான கவர்ச்சிகரமான பேச்சுத்திறமை இந்த பிரச்சனை மோசமடைய முக்கிய காரணமாக அமைந்திருக்கலாம். எனவே, கொரிந்துவில் இருந்த கிரேக்கர்கள், பேச்சாளர்களின் திறமையை விமர்சிப்பவர்களாகவும், மேலும் இவர்களைவிட திறமையான சொல் திறமை மிகுந்தவர்களை வேறு இடங்களில் இருந்து கொண்டுவரவும் வாய்ப்பிருந்தது.

அடுத்து மூன்று அதிகாரங்களும் அவர்களின் எண்ணத்துக்கு பவுலின் நிவாரணமாக பெரும் பகுதியில் இடம் பெறுகிறது. இந்த வசனங்களில் வலியுறுத்தப்படும் செய்திகள் முக்கியத்துவம் வாய்ந்தவை; கிறிஸ்தவர் மனுஷர்களை பின்பற்றுகிறவனாயிராமல், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும் என்பதே.

3. *ஐக்கியத்தை அடைய, கிறிஸ்துவுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்,* இந்தக் கருத்தை வசனம் 13ல் கேட்கப்படும் நயமிகு கேள்வி சுட்டிக் காட்டுகிறது. “கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?” இதற்குத் தெளிவான பதில் “இல்லை” என்பதே. ஆதலால் கிறிஸ்துவின் சரீரமாக இருந்த கொரிந்து பட்டணத்துச் சபை, பிளவு பட்டிருக்கக் கூடாது. “பவுல் உங்களுக்காக சிலுவையில் அறையப்படவில்லை, அறையப்பட்டாரா?” மீண்டும் இதற்கு பதில் “இல்லை” என்பதுதான், பவுலோ, அப்பொல்லோவோ, கேபாவோ நமக்காக சிலுவையில் அறையப்படவில்லை. நாம் நமக்காக சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என்ற ஒருவரையே பின்பற்ற வேண்டும். “பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள்?” மீண்டும் சரியான பதில் “இல்லை” என்பதுதான். நாம் யாருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றோமோ அவரையே நாம் பற்றிக் கொண்டு இருக்க வேண்டும். அந்த நாமம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம்தான்.

4. *ஐக்கியப்பட்டிருக்க, “பேச்சுத்திறனை” வலியுறுத்தாமல், கிறிஸ்துவின் சிலுவையை பிரசங்கிப்பதை வலியுறுத்த வேண்டும்.* பிரிவினைகளைக் குறித்து பேசுகிற இந்த வசனங்களுக்கிடையே வசனம் 17 மாற்றுக்கருத்தாக பிரச்சனைகளுக்கான நிவாரணத்தை அளிக்கிறது: மனுஷனுடைய ஞானத்தாலோ சாதுரிய பேச்சினாலோ இரட்சிப்பு இல்லை கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்பதைப் பிரசங்கிப்பது என்பதுதான் இதன் குறிக்கோள் கருத்து (வசனம் 18). ஒரு உள்ளூர் சபையின் பிரதான கடமை கிறிஸ்துவுடன் இணைந்திருப்பது, “இயேசு கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையுமே பிரங்கிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்” (2:2). அப்பொழுது சண்டைகள்மறைந்து ஐக்கியம் மேற்கொள்ளும்.

கொரிந்து பட்டணத்தில் இருந்ததுபோலவே சில உள்ளூர் சபைகளிலும்

ஐக்கியமின்மை பிரச்சனைகள் இருக்கலாம். உண்மையில் அப்படியில்லாதிருந்தால் ஆச்சரியமே. சண்டை சச்சரவுகளினாலே ஏறத்தாழ ஒவ்வொரு உள்ளூர் சபைகளிலும் அவ்வப்போது பிரச்சனைகள் ஏற்படலாம். அப்பொழுது பவுலின் அறிவுரை நமக்கு உதவிகரமாக இருக்கக்கூடும்: (1) எச்சரிக்கையடைந்து முழு ஐக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். (2) மனிதனையல்ல, கிறிஸ்துவை பின்பற்றுங்கள். (3) சபையின் தலையாய கடமை கிறிஸ்துவில் இணைந்திருத்தல் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (4) சாதுரியமான பேச்சினாலே அல்ல, கிறிஸ்துவின் சிலுவையைப் பிரசங்கிப்பதை வலியுறுத்துங்கள்.

## முடிவுரை

நாம் கொரிந்துவிலிருந்த சபையைக்குறித்து பேசினோம் - அதற்கு இருக்கும் ஆசீர்வாதங்களையும் ஐக்கியமின்மையால் வரும் பிரச்சனைகளையும் பேசினோம். இன்று நாம் அங்கம் வகித்திருக்கும் உள்ளூர் சபையின் நிலை என்ன? நீங்கள் ஊழியமும் தொழுகையும் செய்து கொண்டிருக்கும் பிராந்திய சபையைப் (உள்ளூர் சபையைப்) பற்றி எனக்குத் தெரியாது, என்றாலும், அதைக்குறித்து மூன்று உண்மைகளை அறிவேன்: (1) அது உண்மையில் கர்த்தருடைய சபையானதால் பரிபூரணமாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. (2) விழுந்து போகும் தன்மையையுடைய மனுஷர்களை அது கொண்டிருப்பதால் - எவ்வித சந்தேகமுமின்றி பிரச்சனைகள் இருக்கவே செய்யும். (3) உயிரோடிருப்போரோ மரித்தோரோ, யாரிடத்திலும் நம்பிக்கை வைக்காமல் முழுமையாய் கிறிஸ்துவிடம் மட்டும் வைக்க வேண்டுமென்று அதன் அங்கத்தினர்கள் தீர்மானித்தால், பிரச்சனைகள் தீர்க்கப்படும். சபையின் வெற்றிக்குத் தேவையான வேறு படிகள் அவசியமாக இருந்தாலும், நமது கவனத்தை முதலில் கிறிஸ்துவின் பக்கமும், சிலுவையின் செய்தியின் பக்கமும் திருப்பாத பட்சத்தில் அவைகள் உபயோகமற்றதாகிவிடும்.

---

குறிப்புகள்

[1]ஒன்று கொரிந்தியர் 1:2 அநேக இறையியல் கருத்துக்களைக் கொடுக்கிறது: பரிசுத்தமாக்கப்படுதல், அழைக்கப்படுதல் (1 கொரிந்தியர் 1:9-யும் காண்க), ஐக்கியம், மற்றும் தொழுது கொள்ளுதல் ("கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற" என்று குறிப்பிடப்படுகிறது). [2]சிலர் பவுலைச் சேர்ந்தவர்களென்றும் சிலர் அப்பொல்லோவைச் சேர்ந்தவர்களென்றும் சொல்லக் காரணம், அவர்கள் இருவருமே கொரிந்துவில் பிரசங்கித்தார்கள் என்பதால் தான் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. பேதுருவைச் சேர்ந்தவர்களாக மற்றவர்கள் சொன்னது ஏன் என்று தெளிவாகத் தெரியவில்லை. பேதுருவும் ஒரு வேளை அங்கே பிரசங்கித்திருக்கலாம்; எப்படியாயினும், எருசலேமில் - பேதுருவைத் தனிப்பட்ட முறையில் அறிந்தவர்கள் - கொரிந்துவுக்கு குடிபெயர்ந்து வந்தபோது யூதர்களுக்கான அந்த அப்போஸ்தலனுடன் தங்களுக்கு இன்னமும் கடமை இருப்பதாக உணர்ந்திருக்கலாம். இந்தப் பிரச்சனையைக் குறித்து பவுல் அதிகாரம் 3ல் இன்னும் அதிகமாய் விவரிக்கிறார். [3]சகோதரர்களுக்குள் "சண்டைகளும்" "எதிர்ப்புகளும்" யூதர்களுக்குள் இருந்த வித்தியாசப்பட்ட பிரிவுகளுக்குச் சமமாகவோ அல்லது இன்று காணப்படுகிற கிறிஸ்தவத்துக்குள் இருக்கும் பிரிவு (நாமகரணக்) கூட்டங்களுக்குச் சமமாகவோ 1:12ல் குறிப்பிடப்படவில்லை. மேற்படி வசனத்தில் குறிப்பிடப்படும்

பிரிவுகள் வித்தியாசப்பட்ட உபதேசங்களைப் பிரசங்கித்தார்கள் என்றோ, தனித்தனியான தொழுகைகளைச் செய்ததாகவோ எவ்விதக் குறிப்பையும் நாம் காண்பதில்லை. [4]“நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்” எனும் பதத்தைக் குறித்து விளக்கவுரையாளர்கள் மாறுபடுகின்றனர். கிறிஸ்தவன் தன்னை “நான் கிறிஸ்துவை சேர்ந்தவன்” என்று குறிப்பிடுவது எப்போதாவது தவறானதாக இருந்ததா என்று சந்தேகிக்கின்றனர், அப்படிச் சொன்னவர்கள் முதல் மூன்று கூட்ட மக்களிடம் முரண்படுகின்றனர். (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 53; James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 14-15.)

வேறு சிலர் “கிறிஸ்துவின் கட்சி” என்று கூறுவதும் தவறு என நம்புகின்றனர். மேரியன் சோர்ட்ஸ் “தன்னை கிறிஸ்துவைச் சேர்ந்தவன்” என்று ஒருவர் அடையாளப் படுத்திக் கொள்வது சாதரணமாக பவுலின் அனுமதியோடுதான் ஆனால் கொரிந்தியரின் சூழ்நிலையில் குறிப்பிடுவதும் அவசியமில்லாத புகழ்ச்சி” (Marion L. Soards, *1 Corinthians,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrikson Publishers, 1999], 33). அனைத்துக் கிறிஸ்தவர்களும் “நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்”; ஆனால் கொரிந்துவிலிருந்தவர்கள், இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தி குறிப்பிடப்பட்ட மற்ற பிரசங்கியார்களின் சமத்துக்கு கிறிஸ்துவை மட்டுப்படுத்தி, அவர் சிறப்பானவர், ஞானமிக்கவர், மற்றெல்லா பிரசங்கியார்களிலும் சாதுரியமான பிரசங்கி என்றெல்லாம் அவர்கள் சொன்னாலும் - அந்தக் கூட்டம் தவறானதே.